2009 பிப்ரவரி 19]

28—

வலைதள மையம்

*28986—திரு. து. ரவிக்குமார்:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊனமுற்ற இளைஞர்களுக்கு உலகளாவிய கணினித் தொகுப்பு அறிதல் மையம் அமைக்க கடனுதவி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி. பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். ஊனமுற்ற இளைஞர்களுக்கு உலகளாவிய கணினித் தொகுப்பு அறிதல் மையம் (இண்டர்நெட்) அமைக்க ஊனமுற்றோர் நிதி வளர்ச்சிக் கழகத் திட்டத்தின்கீழ் குறைந்த வட்டி விகிதத்தில் ரூபாய் மூன்று இலட்சம் வரை கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் இருக்கையில் இல்லை. வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

29—

பட்டா

*28940—திரு. சி. சண்முகவேலு:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், வேலூர், பூதனம் பகுதிகளில் ஆதி திராவிடர்களுக்கு நிலம் கையகப்படுத்தி பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?